இல்லை என்றாலும்கூட, பெண் குழந்தைகளை அரசே முன் வந்து 2,000 ரூபாய் டெபாசிட் கட்டியும், கல்விக்கு முக்கியத் துவம் கொடுக்கின்ற இந்த அரசில் பெண்களுக்கு, பாபுலேஷன் அதிகமாக உள்ள தொழில் நகரங்களில் பாதுகாப்பு இன்றி வேலைக்குச் செல்லுகிற பெண்களின் பாதுகாப்பு கருதியும், தன்னுடைய குழந்தையை வீட்டிலே விட்டுச் சென்று, மாலை முழுவதும் வேலை பார்த்துவிட்டுத் திரும்புகின்றவர்களுக்கும் ஒரு பாதுகாப்பு அளிப்பதைக் கருதியும், நிறைய வாடகை கொடுத்துத் தங்களால் வாழ இயலாதவர்களுக்கு, ஊரிலே குழந்தைகளை விட்டு விட்டு வந்து, குடும்பத்தை விட்டுவிட்டு வந்து, நகரங்களிலே வேலை பார்க்கின்ற பெண்களுக்கு உதவிக்கரம் நீட்டுகின்ற வகையிலே ஏழைகளுக்குத் தன் உயிரை ஈந்துகொண்டு இருக்கின்ற....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி. நீங்கள் நேரடியாகத் துணைக் கேள்வி கேட்பதற்கு அனுமதிக்கும்பொழுது ஒரு பிரசங்கம் பண்ணக் கூடாது.

டாக்டர் மு. சினியம்மாள்: டாக்டர் புரட்சித் தலைவியின் அரசிலே பெண்களுக்காக அரசு விடுதி ஒவ்வொரு நகரத்திலும் அமைத்துத் தருவதற்கு அடுத்த ஆண்டிலாவது அரசு பரிசீலனை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: பேரவைத் தலைவரவர்களே, வாடகைக் கட்டடத்தில் இந்தப் பெண்கள் விடுதியை நடத்த வேண்டுமென்றால், 1.5 இலட்சம் ரூபாய் செலவு ஆகும். எல்லா நகரங்களிலும் உருவாக்குவது என்பது நிதிநிலை நெருக்கடியைக் கொண்டு பரிசீலிக்க இயலாது. ஆனால், தொண்டு நிறுவனங்கள் செய்ய முன்வந்தால் அரசு மானியம் அளிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண்—115, செல்வி பி. நிர்மலா திரு. எம். ஆண்டி அம்பலம், மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.

115—

பணிபுரியும் பெண்களுக்கு விடுதி.

*வினா எண் 2050— செல்வி பி. நிர்மலா,

திரு. எம். ஆண்டி அம்பலம்:

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

திண்டுக்கல் நகரில் பணிபுரியும் மகளிருக்கு தனி விடுதி கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

1992 பிப்ரவரி 10]

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்போதைக்கு இல்லை.

செல்வி பி. நிர்மலா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, '' இல்லை '' என்பது மிகவும் சுலபம். '' இல்லை '' என்பதை '' ஆம் '' என்று செயல்படுத்திக் காட்டுவதுதான் நமது புரட்சித் தலைவியின் நல்லாட்சி. ஆண்களைப் போல பெண்களால் தனியாக லாட்ஜிலோ அல்லது மற்றவர்களின் வீட்டிலோ தங்கியிருந்து வேலைக்குச்செல்ல முடியாது என்பதை நம்முடைய அமைச்சரவர்களும் நன்கு அறிவார்கள். ஆகையினால் புரட்சித் தலைவி அவர்களின் நல்லாட்சியில் பெண்களின் பாதுகாப்பு கருதி, இந்தத் திட்டத்தை மறுபடியும் பரிசீலனை செய்து, புரட்சித் தலைவி அவர்களிடம் சம்மதம் வாங்கி '' ஆம் '' என்ற பதிலைத் தருவாரா என சட்டப் பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : பேரவைத் தலைவர் அவர்களே, நான் ''தற்சமயம் இல்லை'' என்றுதான் சொன்னேனே ஒழிய, '' இல்லை'' என்று சொல்லவில்லை. திண்டுக்கல்லிலே ஏற்கெனவே இரத்தினவேல் சுப்பிரமணியம் அறக்கட்டளையின் சார்பாக ஒரு மகளிர் விடுதி நடத்தப்படுகிறது. அதற்கு 35,000 ரூபாய் மானியத்தை அரசு வழங்கிக் கொண்டிருக்கிறது என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குப் பேரவைத் தலைவர் மூலமாகத் தெரியப்படுத்திக் கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. எம். ஆண்டி அம்பலம்.

திரு. எம். ஆண்டி அம்பலம் : பேரவைத் தலைவரவர்களே, திண்டுக்கல்லைத் தலைநகரமாகக் கொண்டு, மரியாதைக்குரிய முன்னாள் முதலமைச்சர் எம். ஜி. ஆர். அவர்கள், திண்டுக்கல்—அண்ணா மாவட்டம் என்று அறிவித்த மாவட்டம். அங்கு அதிகமான மகளிர் அரசு வேலை செய்கின்ற காரணத்தினாலே, அவர்கள் குறைந்த வாடகையில் அங்கு தங்குவதற்கு கட்டித் தர இந்த அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறைந்த வாடகையில் கட்டித் தர முடியாது. ஏனென்றால், வாடகை என்று சொல்லுகின்றபோது சொந்தக்காரர்கள் வேறு யாராவது இருப்பார்கள். ஆனால் அந்தத் திண்டுக்கல் நகரிலே வேறு யாராவது தொண்டு நிறுவனங்கள் இதைச் செய்வதற்கு முன்வந்தால் அரசு உதவி அளிக்கும் என்பதைத் தெரியப்படுத்திக் கொள்ளுகின்றேன்.